வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: மலர்விழி

தேதி: 24.01.2025 நேரம்: மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

வாக்கா ளர்களின் விரல் ரேகைப் பதிவை வாக்களிப்பில் பயன்படுத்தினால், கள்ள ஓட்டு போன்ற பிரச்சனைககள் தீரும் என்று, தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமார் கூறியுள்ளார்.

உலக திருக்குறள் மாநாடு விரைவில் புதுடெல்லியில் நடத்தப்படும் என, மத்திய தகவல் – ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு, நடப்பு கல்வியாண்டிற்கான கல்வி உதவித் தொகை வழங்கும் பணிகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

புதுச்சேரியில் இருந்து, பிரதமரின் சூர்ய வீடு திட்டப் பயனாளிகளில் 15 பேர், புதுடெல்லி குடியரசு தினவிழாவில், சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்க உள்ளனர்.

---

*தேர்தல் ஆணையம் 1 (16)*

வாக்காளர்களின் விரல் ரேகைப் பதிவை, வாக்களிப்பில் பயன்படுத்தும் யோசனை, கள்ள ஓட்டு, ஆள் மாறாட்டம் போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வாக அமையும் என்று, தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ்

குமார் கூறியுள்ளார். புதுடெல்லியில், தேர்தல் ஆணையம் சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள சர்வதேச மாநாட்டில் 2ஆம் நாள் அமர்வில் உரையாற்றிய அவர், வாக்காளர்களின் விரல் ரேகைப் பதிவை சேகரிக்கும் நடைமுறைகளை இந்தியா தொடக்கி விட்டதாக தெரிவித்தார். தொலை நிலை வாக்களிப்பு வசதியினால், மாற்றுத் திறனாளிகள், முதியோர், மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் வாக்காளர்கள், தத்தம் இடத்தில் இருந்தே வாக்களிக்க ஏதுவாகும் என்று, திரு. ராஜீவ் குமார் கூறினார். இத்தகைய வாக்களிப்பில், ரகசியத் தன்மை, மற்றும் பாதுகாப்பை, முற்றிலுமாக உறுதிப் படுத்துதல் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் பயன்பாட்டினால், வாக்குப் பதிவு நடைமுறைகள் மற்றும் வாக்கு எண்ணும் பணிகளை துரிதமாக்கி, மனித தவறுகளை குறைக்க முடியும் என்றும், தலைமைத் தேர்தல் ஆணையர் கூறினார்.

*தேர்தல் ஆணையம் 2 (5)*

தேர்தல் முறைகள் பற்றிய சர்வதேசப் பேரவையின் தலைவர் உட்பட, பல்வேறு பன்னாட்டு அமைப்புகள், மற்றும், 13 நாடுகளின் தேர்தல் நிர்வாக அமைப்புகளில் இருந்து, சுமார் 30 பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். உலக அளவில், தேர்தல் மேலாண்மையில் காணப்படும் முக்கிய பிரச்சனைகள் குறித்து, இம்மாநாட்டில் விவாதிக்கப் படுகிறது.

-----------------------------

*வக்ஃபு-சஸ்பென்ட் (14)*

புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, வக்ஃபு திருத்த மசோதா குறித்த, கூட்டு நாடாளுமன்றக் குழுவின் கூட்டத்தில், அமளியில் ஈடுபட்டதற்காக, 10 எதிர்கட்சி எம்பிக்கள், இன்றைய கூட்டத்தில் இருந்து இடைநீக்கம் செய்யப் பட்டனர். காங்கிரஸ் உறுப்பினர் திரு. நசீர் உசேன், திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர் திரு. கல்யாண் பேனர்ஜி, திமுக உறுப்பினர் திரு. ஆ. ராசா உள்ளிட்டோர் இதில் அடங்குவர். குழுவில் மற்றொரு உறுப்பினரும், பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினருமான திருமதி அபராஜிதா சாரங்கி, பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், திரு. பேனர்ஜி, கூட்டு நாடாளுமன்றக் குழுவின் தலைவர் திரு. ஜெகதம்பிகா பாலுக்கு எதிராக, தரக் குறைவான வார்த்தைகளை பயன்படுத்தியதாக குற்றம் சாட்டினார். அலுவல் பட்டியலில் இல்லாத விஷயங்கள், கூட்டத்தில் விவாதிக்கப் பட்டதாகவும், டெல்லி சட்டப் பேரவைத் தேர்தலை கருத்தில் கொண்டு, விவாதங்களை அவசர கதியில் முடிக்க, முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாகவும், திரு. பேனர்ஜி குற்றம் சாட்டினார்.

-----------------------------

*எல். முருகன் 1 (11)*

உலக திருக்குறள் மாநாடு விரைவில் புதுடெல்லியில் நடத்தப்படும் என, மத்திய தகவல் – ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார். உலக பொது மறையான திருக்குறளின் அறவுரைகள், எல்லா காலத்திற்கும் பொருந்தக் கூடியவை என்றும்.

திருக்குறள் மாநாட்டிற்கான ஏற்பாடுகளை, அரசு தீவிரமாக மேற்கொண்டு வருவதாகவும், அவர் இன்று புதுச்சேரி பல்கலைக் கழகத்தில், **பள்ளி உளவியல் மற்றும் ஹிப்னாடிச அறிவியல்** பற்றிய சர்வதேச மாநாட்டை தொடக்கி வைத்து பேசுகையில் கூறினார். அமைச்சர் மேலும் கூறுகையில்....

**(வாய்ஸ்)**

மதுரை மற்றும் மேலூர் பகுதி மக்களின் கோரிக்கைபடி, டங்ஸ்டன் சுரங்கத் திட்டத்தை நிறுத்தி வைத்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக, டாக்டர் எல். முருகன் கூறினார்.

**(வாய்ஸ்)**

எல். முருகன் 2 (14)

வாழ்வின் எல்லா நிலைகளிலும், நெருக்கடியான தருணங்களை சரியான முறையில் கையாள, ஹிப்னாடிசத்தை பயன்படுத்த முடியும் என, தகவல் -ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் தமது உரையில் கூறினார். இத்துறையில், இதர துறையினரின் ஒத்துழைப்பிற்கும் அதிக வாய்ப்புகள் இருப்பதால், இளம் ஆய்வாளர்கள், தொழில் முறை வல்லுனர்கள், மற்றும், தொழில் துறை தலைவர்கள், இத்துறையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். இத்தகைய ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கவே, **அனுசந்தான் தேசிய ஆராய்ச்சிக் கழகம்,** **ஒரே நாடு- ஒரே சந்தா** போன்ற முன் முயற்சிகளை, அரசு மேற்கொண்டு உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியப் பள்ளி உளவியல் சங்கமும், வதோதராவில் உள்ள ஹிப்னாடிச அகாடமியும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த 2 நாள் மாநாட்டின் தொடக்க விழாவில், பேராசிரியர் பாஞ். ராமலிங்கம் எழுதிய உளவியல் சொற்களஞ்சியம் உட்பட 2 நூல்களை, அமைச்சர் வெளியிட்டார். ஹிப்னாடிச அகாடமியின் வாழ்நாள் சாதனையாளர்

எல். முருகன் 3 (8)

விருது, மற்றும், பள்ளி உளவியல் சங்கத்தின் தலைமைத்துவ விருதுகளையும், அவர் வழங்கி சிறப்பித்தார்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் பொறுப்புத் துணைவேந்தர் பேராசிரியர் தரணிக்கரசு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில். சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், மாநில உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், சட்டமன்ற உறுப்பினர் திரு. கல்யாண சுந்தரம், உள்ளிட்டோர், கலந்து கொண்டனர். உள்நாடு மற்றும் பல்வேறு வெளிநாடுகளில் இருந்து, சுமார் 500 பிரதிநிதிகள் மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

----------------------------

*ரங்கசாமி-கல்வி (11)*

புதுச்சேரியில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த, பள்ளி-கல்லூரி மாணவ-மாணவியர் 7 ஆயிரத்து 195 பேருக்கு, நடப்பு கல்வியாண்டிற்கான கல்வி உதவித் தொகையாக மொத்தம் சுமார் 40 கோடியே 72 லட்சம் ரூபாய் வழங்கும் பணிகளை, முதலமைச்சர் திரு.

ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார். கல்விக் கட்டணத்தை அரசே செலுத்துவதால், பள்ளி – கல்லூரி நிர்வாகங்கள், மாணவர்களிடம் கட்டடணம் கேட்டு வற்புறுத்தக் கூடாது என்று அவர் கேட்டுக் கொண்டார். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை, அந்தந்த அரசு மற்றும் தனியார் பள்ளி-கல்லூரிகளின் வங்கக் கணக்கில் நேரடியாக செலுத்தப் படுவதாக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை தெரிவித்துள்ளது.

-----------------------------

*பெண் குழந்தைகள் தினம் (6)*

தேசிய பெண் குழந்தைகள் தினமான இன்று புதுச்சேரியில், கவுண்டம் பாளையம் முத்து ரத்தின அரங்கம் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த பெண் குழந்தைகள், முதலமைச்சர் திரு. ரங்கசாமியை, சட்டப் பேரவையில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து, பூங்கொத்து கொடுத்து வாழ்த்து பெற்றனர். முதலமைச்சர், பெண் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கி, நன்றாக படிக்குமாறு வாழ்த்தினார்.

-----------------------------

*சூர்ய வீடு-புதுச்சேரி (10)*

சூர்ய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் வசதிகளை, அரசு மானியத்துடன், வீட்டு மேற்கூரையில் அமைப்பதற்கான, பிரதமரின் சூர்ய வீடு திட்டம், வீடுகளின் மின் கட்டணச் செலவை தவிர்ப்பதுடன், பருவநிலை மாற்றத்தை சமாளிப்பதற்கான கருவியாகவும் திகழ்கிறது. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் இருந்து, இத்திட்டப் பயனாளிகளில் 15

பேர், இம்முறை புதுடெல்லி குடியரசு தினவிழாவில், சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்க உள்ளனர். இவர்களில் சிலரை எமது செய்தியாளர் சந்தித்த போது, சூர்ய கர் திட்டத்தின் பயன்கள் குறித்தும், குடியரசு தினவிழாவில் பங்கேற்பது குறித்தும், மகிழ்ச்சி வெளியிட்டனர். இவர்கள் மேலும் கூறுகையில்.....

(வாய்ஸ்)

----------------------------

TDS (6)

வருமான மூலத்தில் இருந்தே, வரிப் பிடித்தம் செய்து கொள்ளும் TDS முறையை ரத்து செய்யக் கோரிய, பொது நலன் மனு ஒன்றை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. மனுவின் வரைவு சரியானதாக இல்லை என்றும், மனுதாரர், உச்சநீதிமன்றத்திற்கு பதிலாக உயர்நீதிமன்றதை அணுகலாம் என்றும், நீதிபதிகள் திரு. சஞ்சீவ் கன்னா, திரு. சஞ்சய் குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு, இன்று தனது உத்தரவில் கூறியது.

----------------------------

*கரீம் நகர் (9)*

மத்திய நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. மனோகர் லால் கட்டார், இன்று தெலங்கானா மாநிலம் கரீம் நகரில், 24 மணி நேர குடிநீர் வினியோகத் திட்டத்தை தொடக்கி வைத்தார். 18 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றி முடிக்கப் பட்டுள்ள இத்திட்டத்தினால், கரீம் நகர் மாநகராட்சிக்கு உட்பட்ட 5 கோட்டங்களில், சுமார் 6 ஆயிரம்

வீடுகளுக்கு, குழாய் இணைப்பு மூலமான குடிநீர், நாள் முழுவதும் கிடைக்கும் என அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தெலங்கானா மாநிலத்தில், 24 மணி நேரமும் மக்களுக்கு குடிநீர் வழங்கும் முதலாவது மாநகராட்சியாக கரீம் நகர் மாநகராட்சி மேம்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

----------------------------

*கிரிக்கெட் (9)*

ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடரின் எலைட் பிரிவில், ஆந்திரா-புதுச்சேரி அணிகளுக்கு இடையே, புதுச்சேரியில் நடைபெறும் பி பிரிவு போட்டியின் 2ஆம் நாளான இன்று, ஆட்ட நேர இறுதி வரை, புதுச்சேரி அணி, தனது முதலாவது இன்னிங்சில், 5 விக்கெட் இழப்பிற்கு, 209 ரன் எடுத்து இருந்தது. முன்னதாக, ஆந்திர அணி, தனது முதலாவது இன்னிங்சில், 303 ரன் எடுத்தது. ஆந்திர அணியில் அதிகபட்சமாக, எஸ்கே ரஷீத், 105 ரன் எடுத்தார். மற்றொரு ஆந்திர வீரர் சசிகாந்த் 99 ரன்னில் ஆட்டம் இழந்தார். புதுச்சேரி அணியின் அங்கித் ஷர்மா, 4 விக்கெட்டுகளையும், அபின் மேத்யூ, 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

----------------------------

*கோ-கோ* (7)

புதுடெல்லியில் நடைபெற்ற, உலகக் கோப்பைக்கான முதலாவது கோ-கோ போட்டித் தொடரில் வெற்றி பெற்ற, இந்திய ஆடவர் மற்றும் மகளிர் கோ-கோ அணியினரை, இன்று, மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை இணையமைச்சர் திருமதி ரக்ஷா காட்சே, பாராட்டி

கவுரவித்தார். இது இந்தியாவின் பாரம்பரிய விளையாட்டுக்கு கிடைத்த வெற்றி என்று அவர் கூறினார். கோ-கோ விளையாட்டு ஒலிம்பிக் போட்டிகளில் இடம்பெறும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

----------------------------

வெடி விபத்து (9)
மஹாராஷ்ட்ர மாநிலம் பந்தாராவில் உள்ள ஆயுதத் தொழிற்சாலை ஒன்றில், இன்று காலை நிகழ்ந்த வெடி விபத்தில், ஒருவர் உயிரிழந்தார். 7 பேர் காயமடைந்தனர். விபத்து குறித்து, பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங், துயரம் வெளியிட்டுள்ளார். விபத்து நிகழ்ந்த இடத்தில், மீட்புப் படையினர் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாகவும், பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவ எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார். காயமடைந்தவர்கள் விரைவில் குணம் பெறத் தாம் வேண்டுவதாகவும், பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார்.

----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*
வாக்காளர்களின் விரல் ரேகைப் பதிவை வாக்களிப்பில் பயன்படுத்தினால், **கள்ள ஓட்டு** போன்ற பிரச்சனைககள் தீரும் என்று, **தலைமைத் தேர்தல் ஆணையர்** திரு. ராஜீவ் குமார் கூறியுள்ளார்.

உலக திருக்குறள் மாநாடு விரைவில் புதுடெல்லியில் நடத்தப்படும் என, மத்திய தகவல் – ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு, நடப்பு கல்வியாண்டிற்கான கல்வி உதவித் தொகை வழங்கும் பணிகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

புதுச்சேரியில் இருந்து, பிரதமரின் சூர்ய வீடு திட்டப் பயனாளிகளில் 15 பேர், புதுடெல்லி குடியரசு தினவிழாவில், சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்க உள்ளனர்.